விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 5 ஷஃபான் 1 இதழ்: 7
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 17-2-1991

## அகதிகள் முகாமை சுற்றி தமிழகத்தில் ராணுவம் குவிப்பு

[சென்னை]
தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள முகாம்களை சுற்றி இராணுவம் நவீனரக ஆயுதங்களுடன் குவிக்கப்பட்டுள்ளது.

போராளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களைச் சுற்றியும் இவ்வாறு இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் தமிழக கரையோரங்களில் கடற்படையினரின் தீவிர ரோந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் கரையோரத்தில் முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## போராளிகள் நடவடிக்கை கட்டுப்படுத்தப்படும்

[சென்னை]
தமிழகத்தில் தொடர்ந்தும் போராளிகளின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படும் என்று தமிழகத்தின் புதிய ஆளுநர் திரு. பீஷ்மன் நாராயண்சிங் தெரிவித்தார்.

சென்னையில் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மத்தியில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கைத்தமிழ் அகதிகள் தக்கமுறையில் பராமரிக்கப்படுவார்கள் ஆனால் சட்ட விரோதச்செயல்கள் எதுவும்

(4ம் பக்கம் பார்க்க)

## அரசு உத்தரவிட்டால்

# ஈராக்கிய படைகளுக்கு எதிராக இலங்கைஇராணுவம்போரிடும்

## இராணுவ தளபதி பேட்டி

(கொழும்பு)

வளைகுடாவில் பன்னாட்டுப் படைகளுடன் இணைந்து ஈராக்குக்கு எதிராக போரிடுமாறு அரசு உத்தரவிட்டால் இலங்கை படைகள் அங்குசெல்லுமென இராணுவ தளபதி ஹமில்டன் வனசிங்க 'சண்டே ரைம்ஸ்'ஸுக்களித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர்மேலும் தெரிவிக்கையில்; இது ஒரு அரசியல் பிரச்சனை என்பதால் அரசே இதற்கான முடிவை மேற்கொள்ளவேண்டும்.

வளைகுடா போரால் இலங்கை படையினருக்கான ஆயுத விநியோகத்திலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## கொள்ளையரால் தாக்குண்டு ஆஸ்பத்திரியில் மரணம்

[யாழ்ப்பாணம்]
கன்னாதிட்டியிலுள்ள வீடு ஒன்றில் இனந்தெரியாத நபர்களினால் இரும்புக்கம்பித் தாக்குதல்களுக்குள்ளாகிப் படு

4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் போராட்டத்திற்கு பல நாடுகள் ஆதரவு

(கொழும்பு)
இலங்கையின் வடக்கு கிழக்கில் சுதந்திர தமிழீழம்கோரி போராடிவரும் விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு மேற்குலக நாடுகள் பல ஆதரவு தெரிவிப்பதாக அரசு அதி

(4-ம் பக்கம் பார்க்க)

## ப. நோ. கூ. சங்க கிளையை பூட்டிய பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ். ப. நோ. கூ. சங்க கொய்யாத்தோட்ட (ஜே/24) கிளையை பொதுமக்கள் பூட்டி திறப்பையும் எடுத்து தம் வசம் வைத்துள்ளனர்.

மேற்படி கிளை முகாமையாளரை கிளைக்குழுவினர் திடீர் இடமாற்றம் செய்ததை எதிர்த்தே ஆத்திரமுற்ற மக்கள் கிளையை பூட்டி திறப்பை எடுத்துச்கொண்டனராம்.

கிளைக்குழுவுக்கும் பொதுமக்

(4-ம் பக்கம் பார்க்க)

## கோவளம் கடலில் கடற்படையினர் சூடு

(யாழ்ப்பாணம்)
காரைநகர் கோவளம் வெளிச்சவீட்டு கடலில் நேற்று காலை கடற்றொழிலாளர்கடற்படையினரால் கடுமையாக தாக்கப்பட்டதுடன் பல வள்ளங்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் நடாத்தப்பட்டது.

வள்ளங்களில் வந்தோர் கடலில் பாய்ந்து நீந்தி கரைவந்து சேர்ந்தனர். உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

[அம்பாறை]
அம்பாறையில் 7-ம் குறிச்சியில் நேற்று முன் தினம் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தயா என்பவர் சயனைற் அருந்திவீரமரணமடைந்துள்ளார். விடுதலைப் புலிகள் இவருக்கு தமது வீரவணக்கத்தைதெரிவிக்கின்றனர் (கவி

## அமெரிக்க தூதரகத்திற்கு கொழும்பில் பலத்த காவல்

(கொழும்பு)
வளைகுடா யுத்தத்தை யடுத்து கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. தூதரகத்தை சுற்றி இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க எதிர்ப்பு அரபு ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் நடாத்தவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மசூதிகளிற்கு அருகிலும் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக எதிர்க்கட்சிகளுக்கும் அரசு சில எச்

(4-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் மிரட்டல் முப்படையும்உஷார்நிலையில்

(கொழும்பு)
தென்பகுதியில் பெரும் தாக்குதல் ஏற்படும் சாத்தியமொன்று இருப்பதையடுத்து முப்படையும் உஷார்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பொது மக்களும் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளனர். பொது இடங்களில் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த எச்சரிக்கை குறித்து பல இடங்களிலும் கலந்த பாதுகாப்பு ஏற்பாடுகளையும்

(4-ம் பக்கம் பார்க்க)

## உடனடி தீர்வுக்கு இந்தியா வற்புறுத்து

(சென்னை)
இலங்கையின் இனப்பிரச்னைக்கு உடனடி அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என வலியுறுத்தும் அறிக்கை ஒன்று நேற்றுப் புதுடில்லியில் வெளியிடப்பட்டுள்ளது

இதேவேளையில் வடபகுதியில் நடைபெற்றுவரும் வான

(4ம் பக்கம் பார்க்க)

## ஆயிரம் தமிழரை அம்பாறையில் காணவில்லை

(கல்முனை)
அம்பாறை மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இதுவரை காணா

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

திருநெல்வேலி முத்துத்தம்பி பாடசாலைக்கு அருகாமையில் நாலரைப்பரப்பு காணியும், 21 இஞ்சி 'சோனி' கலர் தொலைக்காட்சி பெட்டியும் உடன் விற்பனைக்குண்டு. இ. அரிச்சந்திரன்: அரசடி லேன், தாவடி வடக்கு, கொக்குவில். (இ-4359)

## வரலாறு

விற்பனையாகின்றது. வரலாறு-ஆண்டு-11, வரலாறு ஆண்டு-6 (புதிய பாடத்திட்டம்). ஆக்கியோன்: ந தர்மபாலன். சகல புத்தகசாலைகளிலும்பெற்றுக்கொள்ளலாம். (இ-4317)

## University of Jaffna, Sri Lanka

### SERVICES OF TRANSLATORS

Services of other officers or persons outside the public Service who are compotent to do official translations in the following are required by the University of Jaffna

- Engliso to Tamil
- English to Sinhala
- Sinhala to Tamil

Payment will be made on a peace rate basis. Rates applicable for translations are as follows:

Non technical translations - Rs. 15/ per 360 worde.

Teehnical translations- Rs. 30/- per 360 words.

Where the number of words in a translation is less than 360, payment may be made on a pro rate basis

Those who interested are requested to contact the Registrar, University of Jaffna, Thirunelvely The closing date for the above is 1991-03-15.

REGISTRAR.

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1991-02-15, (A-1103)

## ஸ்நானப் பவுடர்

எண்ணெய்க் குளியலுக்கு இயற்கை வளம் கொண்டு தயாரித்த ஒலிவ் ஸ்நானப் பவுடர். பக்கெற் ஒன்றின் விலை ரூபா 1-50 மட்டுமே மில்க்வைற், யாழ்ப்பாணம் (எ-1106)

## சனி மாற்றம்

எங்கும் விற்பனையாகின்றது. விலை ரூபா 5-00; யுத்தச் செவ்வாயின் 7 மாத வக்கிரமும், சனி ராகுவுடனும், 31-3-91 வரை வக்கிர குரு கேதுவுடன் சண்டாள பாவ யோகங்களும் வளைகுடாவை உலகச் சண்டையாக்கி இரத்தக் களரிகளையும், பொருளாதார அழிவுகளையும், இலங்கையில் இனப் படுகொலைகளையும் உண்டாக்கும். Prof. சத்தியதாஸன், ஞானம் கிரோர்ஸ், சித்தன்கேணி. (எ-4361)

## வகுப்புக்கள்

Basic Make - up and Hair Dressing Class. மிக விரைவில் ஆரம்பமாக உள்ளது வெளிநாடு செல்லும் பெண்களுக்கும் பயன்பெறக்கூடிய வகையில் மிகவும் குறுகிய காலத்தில் கற்பிக்கப் படும். உடன் தொடர்புகொள்ளவும்; Yogi Beauty Parlour, 71, நாயன்மார் வீதி. (Off கச்சேரி நல்லூர் வீதி) நல்லூர், யாழ்ப்பாணம். (சி-4360)

## தொழிற் பயிற்சிகள்

றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக், றிப்பியறிங், றீவைண்டிங், எலக்ரிக்கல் வயறிங், எயர்கொண்டிசன் றிப்பியரிங், Diploma in Draughtsman Ship புதிய பயிற்சிகள் ஆரம்பம் 20-02-91 (கிழமை நாட்கள்) 24 02-91 (சனி, ஞாயிறு) விபரம்: Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவை அருகாமை, மேல் மாடி) யாழ்ப்பாணம். (எ-1099)

## இலட்சார்ச்சனை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மாசி மக சண்டிகா ஹோமமும் இலட்சார்ச்சனையும் நாளை மறுதினம் 19-ம் திகதி முதல் 28-ம் திகதி வியாழக்கிழமை வரை நடைபெறவுள்ளது. (101)

## விதை பயறு

(யாழ்ப்பாணம்)

உபஉணவுப் பயிர்ச் செய்கையை அதிகரிக்கும் நோக்கமாக விதைபயறு கிலோ 30 ரூபா வீதம் யாழ் மாவட்டத்திலுள்ள கமநலசேவைத் திணைக்களங்களிலும், விவசாயத் திணைக்களங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றது. (153)

## பயிர்செய்கை கடமை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள சகல கிராமசேவை அலுவலர்கள் பயிர்செய்கை அலுவலர்களாகவும் கடமையாற்றவுள்ளார்கள்.

இது சம்பந்தமாக இவர்களுக்கு அண்மையில் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளது. (153)

# அரிசி 26 ரூ., தேங்காய் 15 ரூ. மண்ணெண்ணெ 40 ரூபா

## மன்னார், பூநகரியிலும் நிர்ணய விலை

[பூநகரி]

மன்னார் மாவட்டத்திலும், பூநகரி, பிரதேசத்திலும் நேற்றுமுதல் அத்தியாவசிய உணவு பொருட்களின் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மாவு கிலோ 25-00 மண்ணெண்ணெ ஒருலீற்றர் 40-00, தே. எண்ணெ ஒரு லீற்றர் 40-00, அரிசி [சிவப்பு] ஒரு கிலோ 28-00, அரிசி (வெள்ளை] ஒருகிலோ 26-00 சீனி ஒரு கிலோ 35-00, சர்க்கரை ஒரு கிலோ 35-00, தேங்காய் ஒன்று 15-00, பற்றறி ஒருசோடி 55-00, சவர்க்காரம் [ஒன்று] 9-00 தேனீர் 1-50, பால்தேனீர் 2-50, பணிஸ் ஒன்று 3-00 வடை 2-25, பாண் 9-00] இறைச்சி [மாடு] 30-03, இறைச்சி (மாடு முள்ளுடன் 25-90; [20]

# வி. ரி. பெர்ணாண்டோ

நாட்டின் சூழ்நிலை காரணமாக,

சுன்னாகத்தில் எமது ஸ்தாபனம் காலை 8 மணி முதல் 12-30 மணி வரையும் திங்கள், புதன், சனிக்கிழமைகளில் நடைபெறும்.

சிறந்த முறையில் பற்களைக் கட்டிக்கொள்ளவும் கண்ணாடிகளை சோதனைசெய்து எடுக்கவும் பெயர் பெற்ற ஸ்தாபனம்:

## வி. ரி. அன் சன்ஸ்

302, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், (ஏ 1105) கே. கே. எஸ், வீதி. சுன்னாகம்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சர்களிடமிருந்து 1991 . 03 . 07 வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்:

தாவரவியல்/ இரசாயனவியல்/ விலங்கியல் பௌதிகவியல்/ கணிதமும் புள்ளிவிவரவியலும் உதவி விரிவுரையாளர்/ சிரேட்ட விரிவுரையாளர் தரம் 11 சிரேட்ட விரிவுரையாளர் தரம் 1

சம்பள அளவுத்திட்டம்:

1. சிரேட்ட விரிவுரையாளர் தரம் I
   ரூபா: 9, 600 - 8 x 250 - 11,600/- மாதமொன்றுக்கு
2. சிரேட்ட விரிவுரையாளர் தரம் II
   ரூபா: 8, 000-5x250-9, 250/- மாதமொன்றுக்கு
3. உதவி விரிவுரையாளர் : ரூபா 3, 900/- (நிலையானது) மாதமொன்றுக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக் கிளையின் சிரேட்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்,

விண்ணப்பப் படிவங்களை தபாலில் பெறவிரும்புவோர் விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 1 . 50 முத்திரையொட்டப்பட்ட 23 x 10 ச. மீ அளவுடைய கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள்மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்;

தெரிவு செய்யப்படும் அபேட்சரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்;

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991 . 02 . 11. (எ-1104)

## பல்கலைக்கழக ஊழியர் தினம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஊழியர்களின் நீண்டகால சேவையை கௌரவித்து நடத்தப்படும் ஊழியர் தினம் இம்மாதம் 23ம் திகதி மாலை 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது:

இவ் வைபவத்தில் 25 வருடகாலம் கடமையாற்றிய 12 ஊழியர்கள் வெள்ளி பதக்கமும் 3000 ரூபா பணமும் அன்பளிப்பாக வழங்கி கௌரவிக்கப்படவிருக்கிறார்கள். (153)

## சிறுதானியச் செய்கை மேற்கொள்ள முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் வயற்காணிகளில் நெல்அறுவடை முடிந்ததும் சிறு தானியச் செய்கையை மேற்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

இதுசம்பந்தமாக விவசாயிகளுக்கு விதை தானியங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இச் செய்கைக்கு இலங்கை வங்கிக் கிளைகள் மூலம் தனிப்பட்ட விவசாயிகளுக்கும் மக்கள் வங்கிக் கிளைகள் மூலம் ப. நோ. கூ. சங்கங்களும் கடன் வழங்குவதற்கு இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளரும் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளரும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

தனிப்பட்ட விவசாயிகள் தங்கள் கடனைப் பெறுவதற்கு இலங்கை வங்கிக் கிளைகளுடன் உடனடியாகத் தொடர்புகொண்டு கடன் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று தங்கள் பகுதி கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (153)

# யார் இந்த சதாம் ஹுசைன்?

## பாலைவனத்தின் ஊடாக கழுதையில் தப்பிச் சென்றார்

இன்று புதிதாகப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் 'குவா குவா' என்று கூறுவதற்குப் பதிலாகச் 'சதாம் சதாம்' என்றே சொல்கின்றனவாம்; அந்த அளவிற்கு உலகத்தில் உள்ள அத்தனை

**பெரியவர்களால்**

**மட்டுமன்றி**

**குழந்தைகளாலும்**

**தூற்றப்பட்டு, தந்தையை**

**இழந்து, தாயாரினால்**

**கைவிடப்பட்டு அநாதையாக**

**எட்டு வயதில்**

**ஒதுக்கப்பட்டவர் சதாம்!**

பேராலும் ஒட்டுமொத்தமாக உச்சரிக்கப்படும் பெயர் 'சதாம் ஹுசைன்'.

மந்திரத்திற்குக் கட்டுப்பட்ட மாதிரி அத்தனை பேரும் அவர் பெயரை உச்சரிக்கும் நோக்கம் என்ன? அத்தனை பார்வைகளும் தீவிரமாக அவர் பக்கம் திரும்பியிருப்பதன் காரணமென்ன? யார் இந்த சதாம் ஹுசைன்?

1937ம் வருடம் ஏப்ரல் மாதம் ஈராக்கின் கிராமங்களில் ஒன்றான அல் ஊஜாவில் பிறந்தவர் சதாம் ஹுசைன். ஒரு கோணத்தில் பார்த்தால் மகாபாரதக் கர்ணன். அதாவது கர்ணனைப் போன்றே பிறப்புக் காரணமாக ஏளனமும், அவமானமும் படுத்தப்பட்டவர்.

### தந்தையை இழந்தார்

பிறந்த உடனேயே தந்தையை இழந்த சதாம், கிராமத்துப் பெரியவர்களால் மட்டுமன்றி, அவர் வயதுக்குட்பட்ட குழந்தைகளாலும் தூற்றப்பட்டவர். ஒதுக்கி ஓரம் கட்டப்பட்டவர். கிராமத்தார் மட்டுமின்றி, பெற்ற தாயான சுபாதுல்லாவாலும் கைவிடப்பட்டவர். 8 வயதிலேயே ஏளனப்படுத்தப்பட்ட சதாம், அநாதையாக ஆதரவின்றி ஒதுக்கப்பட்ட சதாம் அவரது தாய் மாமன் கைரதுல்லாவால் வளர்க்கப்பட்டார்.

### மாமனுக்கு நன்றிக்கடன்

சதாம் ஹுசைனின் பலிப் பெயர் சதாம் தக்ரிதி. தன்னை வளர்த்த தாய் மாமனுக்கு நன்றிக்கடனாக அவரை எதிர்த்த கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரையே சுட்டுக் கொன்றார் சதாம். அன்று அவர் செய்த அந்த முதல் கொலைதான் இன்று யுத்தத்திற்கு வித்திடும் சதாம் ஹுசைனை உருவாக்கிற்று.

### சட்டப் பள்ளியில் பயின்றார்

திக்ரித்தில் தனது எதிர்ப்பாளனைச் சுட்டபின் பக்தாத் வந்து படிக்கத் தொடங்கினார். பல்கலைக்கழகத்தில் உள்ள சட்டப் பள்ளியில் சேர்ந்தார். படிப்பைவிட அரசியல் அவரை அதிகம் ஈர்த்தது. அப்போது அரபு மக்களுக்காகப் போராடுவதற்காக ஈராக்கில் வளரத் தொடங்கியிருந்த பாதி கட்சி அவரைக் கவர்ந்தது. அக்கட்சிக் கூட்டங்களில் கலந்துகொண்டது மட்டுமின்றித் தன் துணிச்சல், தன் நம்பிக்கை, வீரம் இவற்றால் கட்சியின் மூத்த தலைவர்களின் பார்வையைத் தன் பக்கம் திருப்பிக்கொண்டார்.

### மன்னர் ஆட்சி

1959ல் ஈராக்கில் இராணுவப் புரட்சி ஏற்பட்டு, ஈராக் மன்னர் ஃபைசல் வீழ்த்தப்பட்டுத் தளபதி அப்துல் கரீம் கிவாசம் ஆட்சியைப் பிடித்தார். ஆனால் பாதி கட்சி, அப்துல் கரீம் கிவாசத்தைக் கொலைத் தீர்மானித்தது. அந்தப் பொறுப்பை இரகசியப் படை ஒன்றிடம் ஒப்படைத்த பாதி கட்சி, அப்படைக்கு உதவவும், காவலாளியாக இருக்கவும் சதாமை அனுப்பியது. ஆனால் தன் தைரியம், சுறுசுறுப்பு, மூர்க்கத்தனம் இவற்றின் காரணமாகச் சதாம் இரகசியப் படைக்கு முன்னால் சென்று கிவாசத்தை தானே சுட்டார். இதில் தளபதி கிவாசம் உயிர் தப்பினார். ஆனால் சதாம் காலில் குண்டு பாய்ந்தது. அந்த இடத்தை விட்டு ஓடிப்போய் காலில் பாய்ந்த குண்டைத் தானே பேனாக் கத்தியினால் கீறி அதனை வெளியேற்றிக் கழுதை ஒன்றின் மீது ஏறி, பாலைவனத்துக்குள் நுழைந்து தப்பிக்கொண்டார்.

### மரண தண்டனை

கிவாசியைச் சுட்ட குற்றத்திற்காக விதிக்கப்பட்ட மரணதண்டனையில் இருந்து தப்புவதற்காக அவர் மூன்றாண்டுகள் எகிப்திலும், சிரியாவிலும் கழித்தார். அப்போதுதான் நாசருடன் பழக்கம் ஏற்பட்டது. இந்த மூன்றாண்டுகளில் சட்டப்படிப்பு பயின்றதோடு நிற்காமல் தன் நாடான ஈராக்கைக் கைப்பற்றுவதற்கான சகலவிதமான வழிமுறைகளையும் திறமையையும் வளர்த்துக்கொண்டார். ஈராக் அதிபராவதற்கே தான் பிறந்திருப்பதான ஓர் எண்ணம் அவருள் உருவாயிற்று.

### கனவு நனவானது

அது வெறும் கனவாக நிற்காமல் ஈராக்கின் பொறுப்புகளை ஏற்றுக்கொண்ட அந்தக் கனவில் நனவாகவும் மாறிற்று.

---

## இராசிபலன்

**17-02-1991**

**ஞாயிற்றுக்கிழமை**

மேஷம்: பொதுப்பணி தொல்லை, அன்னிய வாசம், பணவிரயம், கவலை.

இடபம்: எதிர்பாராத முடிவு கண்ணில் ரோகம், மனமகிழ்ச்சி, தொழில்லாபம்.

மிதுனம்: தொழில் பலிதம், இனசனவருகை, புதியவர் நட்பு, பாராட்டு.

கடகம்; பதட்ட நிலை, குடும்பவிரோதம், வைத்திய செலவு, கடன்.

சிங்கம்: ஏக்கப்பெருமூச்சு, உடல் உபாதை, மனைவியால் துன்பம்.

கன்னி: தொழில் சிறப்பு, சகோதரர் உதவி, பயணங்களால் அனுகூலம்.

துலாம்; கருத்து முரண்பாடு. அதிகாரிகள்பாராட்டு, புதியசிந்தனை.

விருச்சிகம்: பயனுள்ள செயல், பகை அகலும், தெய்வீகசெலவு, புகழ்.

தனுசு: மனக்குறை, தர்ம சிந்தை, குடும்பபிணி, அலைச்சல் மிகுதி.

மகர: பதவி மாற்றம், புத்திரர்மகிழ்ச்சி, தொழில் லாபம், விருந்துபசாரம்.

கும்பம்: ஏமாற்றம் பெண் பகை, அதிகாரமமதை, கடிததொல்லை.

மீனம்: ஞானிகள் ஆசி, காரியசித்தி, நல்லோர் சினேகம், அதிகயோசனை.

- ஜோஸ்யர்

---

**விளையாட்டு**

## துறைக்கு பேரிழப்பு

(யாழ்ப்பாணம்)

"தமிழ் இளைஞர்களின் விளையாட்டு வளர்ச்சிக்காக தன், வாழ்நாள் முழுவதையும் செலவு செய்தவர் அமரர் ஈ. கே. குமரையா. அவரின் திடீர் மறைவு விளையாட்டுத்துறைக்கு பெரும் பேரிழப்பாகும்".

இவ்வாறு யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க உப-தலைவர் திரு. எம். டி. தம்பிராசா கூறினார்.

கடந்தவாரம் நடைபெற்ற மேற்படிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் இச்சங்கத்தின் முன்னாள் தலைவர் ஈ. கே. குமரையாவின் உருவப்பட திரை நீக்கம் செய்யப்பட்டது. இவ்வைபவத்தில் பல விளையாட்டுத்துறை பிரமுகர்கள் உரையாற்றினார்கள். அமரர் குமரையாவின் குடும்பத்தினரும் கலந்து கொண்டனர்.

## சமாதான முயற்சி நிராகரிப்பு

# பந்நாட்டு படை தாக்குதல் ஈராக் மீது தொடர்கிறது

(பாக்தாத்) வளைகுடாப் போரை நிறுத்தி குவைத்திலிருந்து வெளியேற ஈராக் விதித்த 10 நிபந்தனைகளையும் நிராகரித்த அமெரிக்கா ஈராக் மீது தொடர்ந்தும் அகோர விமானத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளது.

நேற்றும் பல தடவைகள் பாக்தாத் நகர் மீது விமானத்தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இத்தாக்குதலில் பொதுமக்களில் பலர் கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈராக்கின் சமாதான முயற்சியைப் பந்நாட்டுப் படையில் அங்கம் வகிக்கும் முழுநாடுகளும் நிராகரித்துள்ளபோதிலும் சோவியத் ரஷ்யா, சீனா, பாரதம், ஈராக் உட்படப் பல நாடுகளும் இதனை வரவேற்றுள்ளன.

ஈராக்கின் சமாதான முயற்சி முறியடிக்கப்பட்டு யுத்தம் தொடருமானால் சோவியத்தின் கொள்கையில் முக்கிய மாற்றம் ஏற்படலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சமாதான முயற்சியை மேற்கொண்டு ஈராக் வெளியுறவு அமைச்சர் ஜனாப் தாரிக் அஸீஸ் இன்று மாஸ்கோ செல்கிறார். (சி)

### ஆயிரம் தமிழரை

(1ம் பக்க தொடர்ச்சி)

மல் போயுள்ளதாக புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கிறது.

சுமார் 40,000 தமிழர் அகதிகளாக காடுகளிலும் வேறு மாவட்டங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

இராணுவம், ஊர்காவற்படை, சிங்களக் காடையர்களால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர் இம்மாவட்டத்தில் கொல்லப்பட்டதும் தெரிந்ததே. (153)

### போராளிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனு மதிக்கப்படமாட்டாது.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட உரிய நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ரி)

### உடனடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலினால் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்படுவதும் சொத்துக்கள், உடைமைகள் நாசமாக்கப்படுவது குறித்தும் பாரதம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

யுத்தம் தொடர்ந்து நடைபெறுவதால் இலங்கையில் இருந்து வரும் அகதிகளின் தொகை சமீபகாலமாக அதிகரித்து வருவது குறித்தும் பாரதம் மீண்டும் வருத்தம் தெரிவித்துள்ளது. [க]

### புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

வளைகுடா யுத்தம் தற்போது இதனை பெருமளவில் பாதித்திருக்குமென அரசு எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். (சி

### கொள்ளையரால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காயமுற்ற வீரசத்தி மகேந்திரன் யாழ் ஆஸ்பத்திரியில் அதிதீவிர சிகிச்சைப் பகுதியில் அனுமதிக்கப்பட்டு நேற்றிரவு மரணமானார். (ஈ)

### தென்பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளுமாறும் பாதுகாப்பு அமைச்சு கடும் உத்தரவிட்டுள்ளது. (சி)

### ப. நோ. கூ. சங்க

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களுக்குமிடையில் கடந்த பல நாட்களாக பெரும் கருத்து மோதல் இடம்பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. (வி)

### அமெரிக்க

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சரிக்கை அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### கோவளம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாக்கப்பட்டவர்களின் வள்ளத்திலிருந்த பல மீன்களையும் பெறுமதிமிக்க வலைகளையும் படையினர் கடலில் வீசி எறிந்தனராம். (சி)

## மரண அறிவித்தல்

### இரத்தினசிங்கம் தம்பிப்பிள்ளை

பூநகரி ஆலங்கேணியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் தம்பிப்பிள்ளை 15-02-1991 வெள்ளி அன்று காலமானார் இவர் இராசம்மாவின் அன்புக்கணவரும், இரத்தினசிங்கம், முருகேசம்பிள்ளை, பாலசுப்பிரமணியம், இரத்தினபூபதி, சிவமலர், மனோன்மணி (ஆசிரியை கிளிநொச்சிக்குடா அ. மு. க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தையா, தங்கராசா, மசிலாமணி, தையல்நாயகி, பங்கையற்செல்வி ஆகியோரின் மாமனாரும், திருமதி செல்லத்துரை தங்கமுத்துவின் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் 16-02-1991 நேற்று சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(சி-4363) முருகேசம்பிள்ளை

### திருமதி மாரிமுத்து வள்ளியம்மை

அராலி மேற்கைச் சேர்ந்த திருமதி மாரிமுத்து வள்ளியம்மை அவர்கள் நேற்று [16-02-91] காலமாகிவிட்டார். அன்னார் திரு சி. மாரிமுத்து [தேங்காய் வியாபாரி] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. தில்லைநாயகம் [கூட்டுறவுப் பரிசோதகரும், ரோரா விதானையாரும்], திரு. சின்னப்பு [பிரதிப் பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம் – திருகோணமலை], திருமதி க. நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி தி. மனோன்மணி, திருமதி சி. கலாவதி, திரு. பொ. கந்தையா [குணம்], ஆகியோரின் அன்பு மாமியாரும், மாலினி, சத்தியா, கோகிலரமணன், அருணன், சத்தியசீலன், நிர்மலா, கம்சலா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை [17-2-91] காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேலன்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

[சி 4364] சி. மாரிமுத்து


### கல்வி

கணிதம், விஞ்ஞானம், English ஆண்டுகள் 5, 6, 7, 8, 9, 10, 11 வரை கற்பிக்கப்படும். ஆண்டு 5 Scholarship புலமைப் பரீட்சைக்கும் கற்பித்தல் ஒழுங்கு உண்டு. வீட்டுக்கு வந்தும் கற்பிக்கலாம். அனுபவம் உள்ள ஆசிரியர் B Sc. 85, சிவன்கோவிலடி, திருநெல்வேலி.

(சி-4362)


இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 65ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.